மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணங்களை இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

மேட்டுப்பாளையத்தில் உருளைக் கிழங்கு வத்தல் தொழிற்சாலை

*வினா எண். 85— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் உருளைக் கிழங்கு வத்தல் (சிப்ஸ்) தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்திலே உருளைக்கிழங்கு அதிகமாக உற்பத்தியாகிறது. மிகவும் ருசியாக இருக்கிற உருளைக்கிழங்கு சீசன் காலத்திலே அதிகமாக உற்பத்தியாவதால், அதற்குச் சரியான விலை கிடைப்பதில்லை. அதோடு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் முறையிலே உருளைக்கிழங்குகள் அழுகி விடுகின்றன ஆகவே, விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் முறையில் நமது அரசாங்கம் சிப்ஸ் தயாரிக்கும் புதிய தொழிற்சாலையை அங்கு ஆரம்பித்தால், விவசாயிகளுக்கும் ஆதரவாக இருக்கும்; சிறு தொழிலை அபிவிருத்தி செய்கிற முறையிலே தமிழகத்திலே சிறுதொழிலை ஆரம்பிப்பதாகவும் இருக்கும். அந்த முறையிலே அரசாங்கம் சிப்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலையை அங்கு ஆரம்பிக்குமா என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. ஆனால், தனியார் ஆரம்பிக்க முன்வந்தால், கோவை மாவட்ட தொழிற் மையத்தின் வாயிலாக எல்லா உதவிகளையும் அரசு வழங்கும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் தனியார்கள் ஆரம்பிக்கும்போது, அந்தத் தொழிலுக்குத் தேவையான உருளைக்கிழங்கு போன்றவைகளை சப்சிடியாக அல்லது கண்ட்ரோல் ரேட்டுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்து, அந்தத் தொழிலை பின்தங்கிய பகுதியில் ஆரம்பிக்கப்படுகிற தொழிலாகக் கருதுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான உதவிகளை, நியாயமான உதவிகளை இந்த அரசு செய்யும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நேரடியாக சிறுதொழில்களை ஆரம்பிக்கும் உத்தேசத்தைக் கைவிட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே அது ஆய்விலே இல்லை. எனவே அதை விட்டுவிடுகின்ற பிரச்னை எழவே இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்களிலேயிருக்கிற உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகள் கிலோ 30, 40 பைசாவுக்கு விற்கிறார்கள். ஆனால் வெளியிலே மக்கள் கிலோ ரூ. 2-க்கு வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, உற்பத்தி செய்த உருளைக் கிழங்கு நியாயமான விலைக்குக் கிடைக்க ஒன்று அது பதப்படுத்தப்பட்டு பத்திரமாக இருக்க வேண்டும்; அல்லது, வற்றல், சிப்ஸ் போன்றவைகளைச் செய்யக்கூடிய ஏற்பாடுகள் இருக்க வேண்டும். அது சாதாரண விவசாயிகளை, மலைவாழ் மக்களைப் பாதிக்கும் முக்கியமான தொழில் அல்லவா? ஆகவே, அரசுத் துறையிலே அதற்காக ஒரு தொழிலை ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டார்.

கீரந்தங்குடி மாரியம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள்

*வினா எண். 86—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கீரந்தங்குடியில் உள்ள ஸ்ரீ மாரியம்மன் கோயிலுக்கு புறம்போக்கு நிலங்கள் ஏதும் சொந்தமாக இருக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதில் வளர்ந்திருந்த நத்தம், இலுப்பை தென்னை போன்ற மரங்களை முறைகேடான முறையில் வெட்டி விற்பனை செய்யப்பட்டு உள்ளதாக அரசுக்கு இதுவரை ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம், கீரந்தங்குடி கிராமம் அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தின் அனுபவத்தில் மேலாதீட்சமங்கலம் என்னும் இடத்தில் ச.எண். 2/1-ல் 8 சென்ட் நிலம் ஆலயப் புறம்போக்காக இருக்கிறது,

(ஆ) (இ) அரசுக்கு இதுமாதிரி எந்தப்புகாரும் வரவில்லை,